செய்தி வெளியீடு எண்:107 நாள்: 23.02.2017

# செய்தி வெளியீடு

2016–ஆம் ஆண்டு வடகிழக்கு பருவமழை தவறியதால் இதுவரை இல்லாத அளவுக்கு வறட்சி தமிழ்நாட்டில் நிலவுகிறது. இந்த வறட்சியினை சமாளிக்கும் பொருட்டு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. குடிநீர் பிரச்னையை தீர்க்கவும், நீர் ஆதாரப்பணிகளை மேற்கொள்ளவும் ஏற்கனவே தமிழ்நாடு அரசு உத்தரவிட்டு பணிகள் நடைபெற்று வருகின்றன. மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் கொள்கையினைப் பின்பற்றி, வருங்காலத்தைக் கருத்தில் கொண்டு ஒரு முக்கிய பணியாக மாநிலத்தில் உள்ள நீர் ஆதாரங்களை சிக்கனமாக பயன்படுத்தி இவ்வறட்சியினை எதிர்கொள்ளவும், மழை நீரை திறம்பட சேமித்தும், புதிய நீர் ஆதாரங்களை உருவாக்கி நீர்வள ஆதார மேலாண்மையை மேம்படுத்தவும், நீர் பயன்பாட்டை முறையாக ஒழுங்குபடுத்தவும், நீர்நிலைகளை மீட்டெடுப்பதற்கும் தமிழ்நாடு அரசு முடிவு செய்துள்ளது.

இதற்கென அரசிலிருந்து ஓய்வு பெற்ற பொறியியல் வல்லுனர்களைக் கொண்ட ஒரு ஆலோசனைக் குழுவை அமைத்து, இத்தகைய பணிக்கு தங்களை ஈடுபடுத்திக் கொள்ள முன்வரும் வல்லுநர்கள், பொறியாளர்கள், தன்னார்வலர்களையும் ஒருங்கிணைத்து செயல்பட வேண்டி உள்ளது. இதற்கான திட்டங்களையும், உத்திகளையும், வழிமுறைகளையும், கொள்கைகளையும் இக்குழு மூலம் வரையறுத்து அதை தமிழ்நாடு அரசு உரியவாறு பயன்படுத்திக் கொள்ள திட்டமிட்டுள்ளது. இக்குழுவானது தன்னார்வத்துடன் பங்குகொள்ள தயாராக உள்ள பொதுமக்கள் / வல்லுநர்கள் / பொறியாளர்கள் மற்றும் அரசுக்கு வெளியில் உள்ள ஆர்வமுள்ள வல்லுநர்களின் அனுபவத்தையும் / திறமையையும் நீர்வள ஆதார மேம்பாட்டிற்கு பயன்படுத்திக் கொள்ளும் ஒரு அமைப்பாகவும் செயல்படும்.

நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்யும் இந்தப் பேரியக்கத்தின் ஒரு பகுதியாக முதல்கட்டமாக பயனீட்டாளர்களின் பங்களிப்புடன் நீர் நிலைகளை புனரமைக்க பண்டைய ‘குடிமராமத்து’ திட்டத்திற்கு புத்துயிர் அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் காவேரி ஆற்றின் குறுக்கே மாமன்னன் கரிகால் சோழனால் கட்டப்பட்ட கல்லணை பாசன அமைப்புகளின் முன்னோடியாக இன்றும் திகழ்கிறது. பாசன அமைப்பின் சில பகுதிகள் விவசாயிகளால்

பராமரிக்கப்பட்டு "குடிமராமத்து" என்ற பெயரில் புழக்கத்தில் இருந்தது. குடிமராமத்து என்பது மக்கள் தங்கள் உழைப்பு மற்றும் பொருள் பங்களிப்பு மூலம் நீர் ஆதாரங்களை நிர்வகித்தல் ஆகும்.

இது தொடர்பாக இன்று (23.2.2017), தலைமைச் செயலகத்தில் மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில் கூட்டம் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் மாண்புமிகு வனத்துறை அமைச்சர், திண்டுக்கல் சி. சீனிவாசன், மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் திரு கே.ஏ. செங்கோட்டையன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை அமைச்சர் திரு பி தங்கமணி, மாண்புமிகு நகராட்சி மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் திரு எஸ்.பி. வேலுமணி, மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் திரு டி. ஜெயக்குமார், மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. கே.பி. அன்பழகன், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ஆர். துரைக்கண்ணு, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு ஆர்.பி. உதயகுமார், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு சேவூர் எஸ். ராமச்சந்திரன், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., நிதித் துறை, அரசு கூடுதல் தலைமைச் செயலர் திரு கே. சண்முகம், இ.ஆ.ப., முனைவர் கோ. சத்தியகோபால், இ.ஆ.ப., வருவாய் நிர்வாக ஆணையர், திரு கே. பணீந்திர ரெட்டி, இ.ஆ.ப., முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, திரு. டி.கே. ராமச்சந்திரன், இ.ஆ.ப., முதன்மை செயலாளர், தகவல் தொழில்நுட்பத்துறை, முனைவர் பி. சந்திரமோகன், இ.ஆ.ப., வருவாய்த்துறை செயலாளர், பொதுப்பணித்துறை முதன்மைச் செயலாளர் திரு எஸ் கே பிரபாகர், இ.ஆ.ப., கால்நடைபராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலர் திரு. ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., திரு உறன்ஸ்ராஜ் வர்மா, இ.ஆ.ப, முதன்மைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை மற்றும் உயர் அதிகாரிகள் கலந்துக்கொண்டனர்.

குடிமராமத்து திட்டத்தில் வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இப்பணிகளில், ரூபாய் 10 இலட்சத்திற்கும் குறைவான மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும் பணிகள் விவசாய சங்கங்கள், பாசன சபைகள், ஆயக்கட்டுதாரர் மற்றும் ஆயக்கட்டுதாரர்களின் தொகுப்பின் மூலம் நேரடி நியமன அடிப்படையில் அவர்களாலேயே மேற்கொள்ளப்படும். இப்பணிகள் பொதுப்பணித்துறையால் திட்டம் தயாரிக்கப்பட்டு பொதுமக்களால் செயல்படுத்தப்படும். பணிகள் பொதுப்பணித்துறையால் கண்காணிக்கப்படும். ரூபாய் 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட பணிகள், நீர்வள ஆதாரத்துறையின் மூலம் நடைமுறையில் உள்ள ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின்படி செயல்படுத்தப்படும்.

மொத்த மதிப்பீட்டில் 10 சதவீத மதிப்பீட்டுத் தொகை பாசன சங்கங்களிலிருந்து உழைப்பாகவோ அல்லது பொருளாகவோ அல்லது பணப்பங்களிப்பாகவோ பெறப்பட்டு பணிகளை அவர்களே மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**குடிமராமத்து திட்டத்தின் மூலம் நடப்பு நிதி ஆண்டில் 30 மாவட்டங்களில் 1519 பணிகள் ரூபாய் 100 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். பெரும்பாலான பணிகளும் 10 இலட்சத்திற்கு குறைவான மதிப்பீடு என்பதால் பயனாளிகளால் நேரடியாக ஒரே நாளில் தொடங்கப்பட்டு மாநிலம் முழுவதும் ஒரு மக்கள் இயக்கமாக ஒரே சமயம் செயல்படுத்தப்படும். வரும் நிதியாண்டுகளில் கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து குடிமராமத்துப் பணிகள் நபார்டு நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும். வரும் 2017–18 ஆம் ஆண்டில் இதுபோன்ற பணிகள் ரூபாய் 300 கோடி செலவில் ஏப்ரல்/மே மாதத்தில் மாநிலம் முழுவதும் ஒரே நாளில் தொடங்கப்பட்டு மக்கள் இயக்கமாக செயல்படுத்தப்படும்.**

குடிமராமத்து திட்டத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிச்சாமி அவர்கள் மார்ச் மாதம் முதல் வாரத்தில் தொடங்கி வைக்க உள்ளார். அன்று மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் பிரதிநிதிகள் முன்னிலையில் பயனாளிகளால் பொதுப்பணித்துறை உதவியுடன் இத்திட்டத்தினை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. அன்றையதினம் தன்னார்வ தொண்டு புரிய முன்வரும் மக்களும் இத்திட்ட செயலாக்கத்தில் ஈடுபாட்டோடு பங்குகொள்ள

கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இப்பணிகளை மாவட்டந்தோறும் மாவட்ட ஆட்சியர்கள் ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டு திட்டத்தை தொடங்கி நடைமுறைபடுத்துவார்கள்.

*******

**வெளியீடு: இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**